# தன் ஜீவன் (**Own Soul)**

வணக்கம் சகோதர சகோதரிகளே:

**"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு." (திருக்குறள் 247)**

- இறைவனிடத்திலிருந்து சிறப்பான ஞானம் பெற்று வாழ்ந்த வள்ளுவரின் வார்த்தை.

**"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை (ஆத்மாவை) நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத்தேயு 16:26)**

- இறைவனே மனிதரூபத்தில் நமக்காக வந்து வாழ்ந்து,
இன்றும் ஜீவிக்கிற இயேசு கிறிஸ்துவின் வார்த்தை.

இந்த வசனங்களிலுள்ள "அவ்வுலகம்", "ஆத்மா" என்ற வார்த்தைகளை ஒருகணம் சிந்திப்போம்.

---

*Ref: (Dictionary)*

Soul: 1. the principle of life, feeling, thought, and action in humans, regarded as a distinct entity separate from the body, and commonly held to be separable in existence from the body; the spiritual part of humans as distinct from the physical part.
2. the spiritual part of humans regarded in its moral aspect, or as believed to survive death and be subject to **happiness or misery in a life to come**: arguing the immortality of the soul.

*Ref: (Tamil Dictionary)*

ஆன்மா: Soul. உடலிலிருந்தும் மனத்திலிருந்தும் வேறானதாகக் கருதப்படும் பொருள்.
Soul: ஆத்மா, பிராணன், ஓர் உயிர்.

ஜீவன்: 1. உயிர் life. 2. உயிர்வாழ்வது. human being. 3. சக்தி. Strength of energy.
4. உயிரோட்டம். **Soul**, liveliness, Spirit.

மோட்சம்: 1. liberation, salvation. (இறந்த பிறகு அடையும்) முக்தி நிலை.
2. சொர்க்கம். Heaven.

சொர்க்கம்: Heaven: பரலோகம்: (புண்ணியம் செய்தவர்கள் இறந்த பின் அடைவதாக நம்பப்படும்) இன்பம் நிறைந்த மேலுலகம்.

புண்ணியம்: **1. நற்செயல்களைச் செய்வதால் பெறும் நன்மை.**
(Favourable effect or blessing accruing through virtuous deeds)
2. நல்வினையின் பயன் (Effect of virtuous deeds.)
3. நல்விளைவு: பயன். (use)
**4. (இறைவனின்) அருள் ஆசி. (God's Blessing)**
5. புனிதம். (Holy, Sacred.)

நாம் (புண்ணியம்) நற்செயல்களைச் செய்வதினாலே மட்டும், முக்திநிலை அடையமுடியாது.
இறைவனுடைய ஆசியினால்தான் முக்திநிலை அடையமுடியும்.

---

1. **நற்செயல்கள்:** எப்படிச் செய்கிறோம்? எவ்வளவு செய்கிறோம்? என்பது ஒவ்வொருவரையும் பொறுத்து வேறுபடும். ஒருவரும் பரிபூரணமாக நற்செயல்களை செய்யமுடியாது.
ஆனால் நற்செயல்களைச் செய்யவேண்டும்.

…நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்: இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். (எபி. 13:16)

நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். (தீத்து 3:5)

……எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது,…..(ஏசாயா 64:6)
(உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலைகளையும் கவனித்துப் பார்த்தீர்களேயானால் இது நன்கு விளங்கும்.)

(தேவனுடைய) உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம். (சங்கீதம் 119:142)
(இந்த சத்திய வேதத்தை வாசித்து தேவனோடு நெருங்கி இதை தியானித்தால் இது விளங்கும்.)

*தயவுசெய்து நீங்கள் வாசியுங்கள்…. நீங்களே உணர்வீர்கள்…*

2. **<u>இறைவனின் ஆசி</u>**: நம்மாலானது அல்ல. இறைவனே நமக்கு அருள்வது.
கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; (எபேசியர். 2:8-9)

…..கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே **<u>விசுவாசித்தால்</u>** இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். (ரோமர். 10:9-10)

(இந்த இரட்சிப்புதான் ஆத்துமாவைக் காத்துக்கொள்ளும், மோட்சத்தைக் கொடுக்கும்.)

நாம் (புண்ணியம்) நற்செயல்களைச் செய்வதினாலே மட்டும், முக்திநிலை அடையமுடியாது.
இறைவனுடைய ஆசியினால்தான் முக்திநிலை அடையமுடியும்.

புண்ணியத்துக்கு எதிரானது பாவம்.
நாம் (புண்ணியம்) நற்செயல்களைச் செய்வதினாலே நமது பாவங்களை நீக்கமுடியாது.

…..கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தார். (1 கொரி. 15:3-4)

நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். (1 பேதுரு 2:24)

**<u>விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்</u>** காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபிரெயர் 11:1)

இப்போ நாம் தியானித்த வார்த்தைகளில் **உறுதியான நம்பிக்கை வைத்து**, அதாவது விசுவாசித்து, மேலும் வேதத்தை வாசியுங்கள்.
இந்த ஜீவனுள்ள வார்த்தை உங்களுக்கு வழிகாட்டும். உங்கள் ஆத்துமா காக்கப்படும்.

*வேதத்தின் சிறப்பு:*

- ஆண்டவருடைய இந்த வேதம்…மக்களின் வாழ்க்கை தொடக்கம், அன்றாட சூழ்நிலைகள், எதிர்காலம், இவ்வுலக வாழ்க்கையின் முடிவு - அவ்வுலக வாழ்க்கைக்கு நம்மை ஆயத்தப்படுத்த இறைவனின் படிப்படியான திட்டம்.
- இறைவனுக்கும், இறைவன் படைத்த மனிதனுக்கும் இருந்த உறவு பிரிக்கப்படல், தம்மிடமிருந்து பிரிக்கப்பட்ட மனிதர்களை தம்மிடம் சேர்த்துக்கொள்ள மனிதர்கள் மூலமாக இறைவன் செயல்படுதல். அவைகளினாலே மனிதர்கள் மீண்டும் இறைவனோடு ஒப்புரவாக முடியாமல் போனதால்,
- இரக்கத்தில் ஐசுவரியமுள்ள இறைவன், தானே மனிதரூபத்தில் மனிதர்கள் மத்தியில் வந்து, வாழ்ந்து, மனிதனை தன்னோடு ஒப்பரவாக்கிக்கொள்ள, தானே **ஒரே முடிவான, இணையற்ற, ஒப்பற்ற புதிய வழியை ஏற்படுத்தி,** அதன்மூலம் நாம் இறைவனை அடைய அவரே நம்மோடு என்றும் ஜீவித்து அருள்செய்து வருகிறார்.

இவைகளையும் இன்னும் பல விவரங்களையும் தெளிவாக விளக்குகிற,
இந்த ஜீவனுள்ள வார்த்தை உங்களுக்கு வழிகாட்டும். உங்கள் ஆத்துமா காக்கப்படும்.

66 புத்தகங்கள்…40க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் மூலமாக ஆண்டவரே தம்முடைய ஜீவனுள்ள வார்த்தைகளை…. வெவ்வேறு காலக்கட்டங்களில் அருளினார்.
[~1500 வருட காலக்கட்டங்களில் எழுதப்பட்டன (கிமு 1446 – கிபி 95)]. இவைகள் அனைத்து புத்தகங்களும் கிறிஸ்துவின் ஒரே நோக்கத்தை பிரதிபலிக்கின்றன. ஒன்றுக்கொன்று முரண்பாடில்லை. நேற்றும் இன்றும் என்றும் மாறாதது.

இந்த ஜீவனுள்ள வார்த்தை உங்களுக்கு வழிகாட்டும். உங்கள் ஆத்துமா காக்கப்படும்.

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று. (கொலோசெயர் 1:19-20)

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான்/John 3:16)

**"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு." (திருக்குறள் 247)**

- இறைவனிடத்திலிருந்து சிறப்பான ஞானம் பெற்று வாழ்ந்த வள்ளுவரின் வார்த்தை.

**"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை (ஆத்மாவை) நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத்தேயு 16:26)**

- இறைவனே மனிதரூபத்தில் நமக்காக வந்து வாழ்ந்து,
இன்றும் ஜீவிக்கிற இயேசு கிறிஸ்துவின் வார்த்தை.

*தொடர்ந்து சிந்தியுங்கள். வாசியுங்கள், தியானியுங்கள்…..*

எல்லாம் வல்ல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களை ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

*அன்புடனும் ஜெபத்துடனும்,*

*M.Kalyanam*

www.kalyanam.ca